T-UN-661

தமிழ்ப் பல்கலைக் கழகச்

செய்தி மலர்

மலர் 2 திருவள்ளுவராண்டு 2015 மாசி-2 இதழ் 11
14-2-84

தமிழ் நாட்டின்-இந்திய நாட்டின் கடமை

பிற நாட்டுத் தமிழர்களின் நலம், மேம்பாடு முதலியவற்றைக் காப்பது தாய்த் தமிழகத்தின் – இந்திய. நாட்டின் – கடமை. ஏனெனில் இந்தத் தமிழினம் இந்திய நாட்டின் அயலுறவுக்கு முன்னின்று உதவியதை அண்மைக்கால நிகழ்ச்சிகள் பல தெளி–வாக்கின. புற நாட்டுத் தமிழர்களின் நல்வாழ்வு இந்திய அரசின் கொள்கை விளக்கத்திற்கும் வலிமைக்–க்கும் துணை நிற்கும் என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

தமிழ்ப்பண்பாடு ஓர் அறிமுகம்
நிறைவு நாள் விழாத் தலைமையுரை
– துணைவேந்தர் டாக்டர் வ. அய். சுப்பிரமணியம்

நிறைவு விழா

'தமிழ்ப்பண்பாடு ஓர் அறிமுகம்' வகுப்பின் நிறைவு விழா, தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் 30-12-'83 அன்று பிற்பகல் 3-30 மணியில் நடைபெற்றது. பேரா.. மா. சண்முகசுப்பிரமணியன் வரவேற்புரையாற்றினார். துணைவேந்தர் டாக்டர் வ. அய். சுப்பிரமணியம் தலைமை தாங்க, தவத்திரு குன்றக்குடி அடிகளார் நிறைவு விழா சொற்பொழி வாற்றினார். பேரா. கு. நம்பிஆரூரன் நன்றி நவின்றார்.

இந்தியாவில் தமிழர் எண்ணிக்கை குறைந்துள்ளது.

ஆண்டு	விழுக்காடு
1961	6.91
1971	6.88

–திராவிட மொழியியல் இணையம், சனவரி–1984.



'நீங்கள் எந்த நாட்டில் வாழ்கிறீர்களோ அந்த நாட்டை உங்கள் நாடாக ஆக்கிக்கொண்டு, அந்த நாட்டினுடைய மொழிக்கும் கலைக்கும் உங்களாலான தொண்டைச் செய்து, அந்தநாட்டுக் கலைக்கும், மொழிக்கும், பண்பாட்டுக்கும் உங்கள் பண்பாட்டை நீங்கள் கொடுத்துச் சிறப்புடன் வாழ வேண்டும். அன்பு, தமிழ்ப் பண்பாட்டின் உயிர். அருளுணர்வு தமிழ்ப் பண்பாட்டினுடைய ஆக்கம்.

"பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்" –என்பது நம்முடைய வாழ்க்கை முறை. இந்த உயர்ந்த பண்–பாட்டை உலகத்துக்கு அறிமுகப்படுத்துங்கள். தாய்த் தமிழகம் இப்படி இருக்கிறதேயென்று நீங்கள் எண்ணுவதைவிட அதற்கு என்ன வளம் சேர்க்கலாம் என்று பாருங்கள். உலகத்தில் வாழ்கிற–அனைத்து நாடுகளில் வாழ்கிற தமிழர்கள், தங்கள் தமிழ்ப் பண்பாட்டை உலகத்திற்கு அறிமுகப்படுத்தினால், மற்றவர்கள் எடுத்துக் கொள்ளத் தக்கவாறு சொன்னால், உலகத்தின் பண்பாடாக, தமிழ்ப் பண்பாடு நிலைபெறுதற்குரிய வாய்ப்புண்டு. அதற்–குரிய செறிவும், தகுதியும் அதற்குண்டு. அதை நீங்கள் செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டு வாழ்த்தி விடைபெறுகிறேன்.

–'தமிழ்ப்பண்பாடு ஓர் அறிமுகம்' நிறைவு நாள் விழா உரையில் தவத்திரு குன்றக்குடி அடிகளார்

சிங்கப்பூர்த் தமிழருடன் சில மணித்துளிகள்

அண்மையில் தமிழ்ப் பல்கலைக் கழகம்நடத்திய 'தமிழ்ப்பண்பாடு-ஓர் அறிமுகம்' என்னும் பயிர்சி வகுப்புக்கு வந்திருந்த சிங்கப்பூர்ப் பாடத்திட்ட மேம்பாட்டுக்கழகத்தின் திட்ட இயக்குநர் திரு எசு டானியேலுடன் நடந்த 'நேர்காணல்' நிகழ்ச்சியில் திரட்டிய செய்திகள் வருமாறு:

<u>சிங்கப்பூரில் தமிழ்</u>: "தமிழ் மக்கள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் வாழும் பல அயல் நாடுகளில் சிங்கப்பூரும் ஒன்று. சிங்கப்பூரின் ஆட்சி மொழிகளில் ஒன்றாகத் தமிழும் சிறந்திலங்குகிறது. உலகப்போருக்கு முன் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்ட பள்ளிகள் தொழிற் சங்கங்களாலும் சமூகநல நிறுவனங்களாலும் தொடங்கப்பட்டன. இவற்றைத்தவிர மலாய்மொழிப் பள்ளிகளும் சீன மொழிப்பள்ளிகளும் இருந்தன. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்ட பள்ளிகள் சிறப்பிடம் பெற்றன. 1959-ஆம் ஆண்டிலிருந்து இன்றுள்ள அரசு எல்லா மொழிகளுக்கும் இணையான நிலை அளித்தது. அங்கிருந்த சில பள்ளிகளில் இரு பள்ளிகள் அரசுப்பள்ளிகளாயின. எல்லாப் பள்ளிகளிலும் மாணவர்கள் இரண்டாவது மொழியொன்றைக் கற்கவேண்டும் என்றவிதி உள்ளது. இந்த ஏற்பாட்டினால் ஆங்கிலப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களும் தமிழ் கற்க வாய்ப்பு உள்ளது. இப்போது தமிழ் மொழி, தொடக்கப்பள்ளி முதல் பல்கலைக் கழகப் புகுமுக வகுப்புவரை கற்பிக்கப் படுகிறது. 1972-ஆம் ஆண்டுவரை தொடக்கப் பள்ளிகள் (Primary Schools) தமிழ் கற்பிக்க, தமிழ் நாட்டிலிருந்து வரும் பாடநூல்களையே நம்பியிருந்தன. உயர்நிலைப் பள்ளிகளிலும் (Secondary Schools)இந்நிலை இவ்வாண்டு வரை இருந்தது. 1980-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட கல்வியமைச்சகத்தின் ஒரு பிரிவான சிங்கப்பூர்ப் பாடத்திட்ட மேம்பாட்டுக் கழகம் (Curriculum Development Institute of Singapore) பேச்சுத் தமிழில் 5 நூல்களும், 5 பாடநூல்களும், 5 பயிற்சி ஏடுகளும் வெளியிட்டுள்ளது. இவையே இக்கழகத்தால் முதன் முதலாக வெளியிடப்பட்ட நூல்களாகும். இவற்றை வெளியிட்டதோடு ஒலிப்பதிவுநாடாக்களில் பாட்டுகள், உரையாடல்கள் ஆகியவையும் உருவாக்கப்பட்டுள்ளன.

1983-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் தமிழில் நூல் முதலியவற்றை வெளியிட தொடக்கப்பள்ளி நிலைக்கு ஒன்றும் உயர்நிலைப் பள்ளி நிலைக்கு ஒன்றுமாக இரண்டு திட்டங்கள் உருவாயின . இப்போது முதல் வகுப்பிலும் இரண்டாம் வகுப்பிலும் புதிய பாட நூல்கள் பயன்படுத்தப்படுகின்றன. இன்னும் நான்காண்டுகளில் எல்லா வகுப்புகளுக்கும் எங்கள் நாட்டிலேயே உருவாக்கப்பட்ட நூல்கள் பயன்படுத்தப்படும்" என திரு டானியல் குறிப்பிட்டார்.

<u>தமிழுக்குப் பரிசு</u>: பள்ளிகளில் தென்னாட்டிலிருந்து சென்றவர்களுடைய குழந்தைகள் அனைவருமே தமிழ் படிப்பதாக திரு டானியல் கூறினார். தமிழர் பேரவை, தமிழர் பண்பாட்டுக்கழகம் ஆகியவை தமிழில் அதிக மதிப்பெண் பெறுவோர்க்குப் பரிசு அளிப்பதாகவும், அரசும் இத்தகையபரிசுகள் அளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

<u>போட்டிகள்</u>: தமிழாசிரியர் மன்றம் போன்ற சில அமைப்புகளும் தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பணிபுரிகின்றன. 'விடுதலை நாள்'விழாவையொட்டி, கட்டுரைப்போட்டி, திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி ஆகியவை நடத்தப்படுகின்றன. பண்பாட்டு அமைச்சகம், கவிதைப்போட்டி, கதைப்போட்டி ஆகியவற்றை, தமிழ் உள்பட நான்கு மொழிகளிலும் நடத்தி, பரிசளிக்கிறது.

<u>நாளேடு-வானொலி</u>: 'தமிழ்முரசு'நாளேடு தமிழ் எழுத்தாளர்கள் உருவாகப் பெரும்பணி புரிகின்றது ஞாயிறுமலரில் புதிய எழுத்தாளர்கள் ஊக்குவிக்கப் படுகின்றனர். "சிங்கப்பூர் வானொலியில் விடியல் முதல் இரவு 9 மணிவரை தமிழ் முழங்குகிறது. தொலைக்காட்சியிலும் நாள்தோறும் தமிழ் நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன" என திரு டானியல் கூறினார்.

— செ.இரெ.செயச்சந்திரன்

தமிழ்க் கலை

தமிழ் 1. கலை 2இன் பொருளடக்கம்

இலங்கையில் வைணவம்
மொழி முதற் குற்றியலிகரம்
திருவில்லிபுத்தூர்க் கோயிற் சாசனம்
வள்ளிமணமாலை வெண்பா
முதல், கரு, உரி-ஓர் ஆய்வு
இரண்டாம் சரபோஜி காசிப்பயணம்
திருவள்ளுவரும் திருக்குறளும்
தமிழ் ஆய்வேடுகளின் தரம்
தமிழில் அறிவியல்-ஒரு பார்வை
கணிப்பொறி-நல்வாழ்விற்கு ஒரு நற்கருவி

தமிழ் நாளேடுகளில் அறிவியல் செய்திகள்

தமிழில் வெளிவரும் நாளிதழ்களில் தினத்தந்தி, தினமணி, தினமலர், தினகரன் ஆகியவை குறிப்பிடத் தக்கவை. இந்த நான்கு இதழ்களும் அறிவியல் பரப்பலுக்கு எந்த அளவு சிறப்பிடம் தருகின்றன என்பதை அளவிட்டு அறிதற்காக இவ்விதழ்களின் ஒரு கிழமைக் (வார) காலத்திய இதழ்கள் (டிச. 16-22, 1983) கணக்கெடுப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இவற்றில் தினத்தந்தி அறிவியல் கட்டுரைகளையோ, அறிவியல் செய்திகளையோ, அறிவியல் துணுக்குகளையோ கணக்கெடுப்புக் குரிய காலத்தில் வெளியிடவே இல்லை.

<u>தினகரன்</u>

21.12.83	பக்கம்-5-3 முழுப்பத்தி மருத்துவ வல்லுநர் டாக்டர். பி. சி. சின்ன கிருட்டினன் பேட்டி
22.12.83	பக்கம்-5 அரைப்பக்கம் வேளாண்-மைச் செய்தி.

<u>தினமலர்</u>

16.12.83	பக்கம் 6 - அரைப்பக்கம் புற்று நோய்ச் சிகிச்சையில் புதிய முன்-னேற்றம்.
17.12.83	பக்கம் 5 இரத்தக் கொதிப்புக்குப் புதிய சிகிச்சை முறை.
21.12.83	பக்கம் 4-3-பத்திகள் முயலையும் இராட்சச உருவமாக்கும் மனிதனின் உயிர் அணுக்கள்
21.12.83	பக்கம் 5-கால் பக்கம் அண்டார்-டிகாவில் கடந்தகால ஆராய்ச்சிகள்
21.12.83	பக்கம் 5-கால் பக்கம் பெருகி வரும் வீடியோ பார்லர்கள்

<u>தினமணி</u>

20.12.83	பக்கம் 2-கால்பக்கம் செயற்கைத் துணைக்கோள் மூலம் புதிய வால்-நட்சத்திரங்கள் காணப்பட்டன.
20.12.83	பக்கம் 2-கால்பக்கம் பெட்ரோல், டீசலுக்குப் பதிலாக உமி, தேங்காய் ஓடு போன்ற மரப்பொருள் சில ஆய்வுகள்
20.12.83	பக்கம் 7-கொசுவை ஒழிக்க புது பூச்சிக்கொல்லி.

தினமணியில் திங்கட்கிழமை தவிர நாள்தோறும் 2ம் பக்கத்தில் அறிவியல், தொழில்நுட்பம், வேளாண்மை முதலியவை பற்றிய கட்டுரைகள் வெளிவருகின்றன.

-இராம. சுந்தரம், திட்டம்-தமிழ் வளர்ச்சித்துறை.

அறிவியல் துளி.

காரட், முட்டைக்கோசு மற்றும் கால்நடைத் தீவனப்புல் முதலியவற்றின் வளர்ச்சிக்கு உவர்ப்புக் குறைந்த கடல் நீர் உதவுகிறது என்று சோவியத் அறிவியலார் கண்டுள்ளனர்.

— நன்றி: இந்து 11-1-'84.

குளவி ஒரு பூச்சியா?

'குளவி' என்பது மல்லிகையன்று, பூச்சியைச் சுட்டியது என்று சனவரி மாதச் செய்திமலரில் ஒரு விளக்கக் குறிப்புக் காணப்படுகிறது.

பாடலின் முதன்மைப் பொருள் உண்ணுநீராகிய குடிநீர் பற்றியது. வழியில் நீர் மிகுதியும் இல்லை; நல்ல நீரும் இல்லை; சிறிதளவான ஊற்று நீரே கிட்டுகின்றது. அதுவும் சருகிலை, பழம், பூ முதலியன உதிர்ந்து அதனை மூடியதால் அவை அழுகி, அழுகல் நாற்றமுடைய சின்னீராகவும் உள்ளது.

இங்கே நீரை மூடிய குளவி என்பது காட்டு மல்லிகையேயாம். இங்கே அம்மல்லிகையின் இலைச் சருகு, வாடி உதிர்ந்த பூ ஆகியவற்றைச் சுட்டி உரைத்ததாம்.

காட்டு மல்லிகை, மல்லிகை என்னும்பொரு-ளிலேயே சங்க இலக்கியம் முழுமையிலும் குளவி ஆட்சி பெறுகிறது. கொட்டும்குளவிப் பறவையைக் குறிக்கச் சங்க இலக்கியத்தில் மட்டுமன்று; இடைக் கால, பிற்கால இலக்கியங்களில் கூட ஆட்சிஇல்லை. பின்னாளில் பாடப்பெற்ற தனிப்பாடல் ஒன்றையே சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி மேற்கோள் காட்டுகிறது. குளவி என்பது பறவை-யைக் குறித்து வரும் வழக்கு மிகமிகப் பிற்பட்டது. எனவே, குறுந்தொகையில் வரும் குளவிஎன்பதற்குப் பறவை எனப் பொருள் கோடல் பொருந்தாது.

'வேட்டம்' என்னும் அடைமொழி செந்நாய்க்-குத் தரப்பட்டது. அதைத்தவிர வேட்டையாடிய ஊனைப்பற்றிய பேச்சே இப்பாடலில் இல்லை. ஒரு-கால், 'ஊண் மிச்சில்' என்பதனை 'ஊன் மிச்சில்' எனத் தவறாகப் படித்தமையால் ஊனின் அழுகற் சின்னீர் என்று கொண்டு குளவிப் பறவையைக் கொண்டு வருகிறார் போலும். ஆனால், அவர் கொடுத்த குறிப்பில் காணும் பாடம் 'ஊண் மிச்சில்' என்பதே. அழுகல் ஊண் நீரை மனிதர் உண்ணுவரோ? எவ்வகையானும் 'பூச்சி' எனப் பொருள் கொள்ளுதல் இப்பாடலின் பொருளுக்குச் சற்றும் பொருந்தாது.

— மு. சண்முகம்பிள்ளை, ஓலைச்சுவடித்துறை.

இ.அ.அ. மட்டும்.

தமிழ்ப் பல்கலைக் கழகச்
செய்தி மலர்
திங்களிதழ்
பதிவெண் 15033/82X1.

திருமதி புலவர் திலகம் அவர்கள்
3/1709 பிச்சாண்டி முதலி சந்து,
மானோஜியப்பா வீதி,
தஞ்சாவூர்.

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்-613 001
தமிழ்நாடு - இந்தியா

கலைச் சொல்லாக்கப் பட்டறிவு

தமிழ்ப் பல்கலைக் கழகம் தமிழில் மருத்துவ நூல்களை எழுதுவதற்கான திட்டத்தை அறிவித்திருந்தது. 'பொது அறுவை மருத்துவம்' பற்றி நூல் எழுதலாம் என எண்ணினேன். கருத்துக்களைத் தெளிவு படுத்துவதில் தொடக்கத்தில் கொஞ்சம் தொல்லை இருந்தது. கலைச் சொற்களை ஆக்கிக் கொள்ளச் சில வழிமுறைகளைக் கடைப் பிடித்துச் சிக்கலுக்குத் தீர்வு கண்டேன்.

வழக்கிலுள்ள சொற்களை எடுத்தாளுதல்:

'இரத்தசோகை' - இச்சொல் பெரும்பாலும் எல்லோருக்கும் பழகிய சொல். anaemia என்பதற்கேற்ற சொல்லாக இதனைப்பயன்படுத்திக் கொள்வதில் தடை இல்லை.

பிறநூல்களில் கண்ட சொற்களை எடுத்தாளல்:

சில கருத்துக்களை விளக்கத்தக்க சொற்கள் மக்கள் வழக்கில் இல்லாது போகலாம். நியூ செஞ்சுரி புக் அவுசு, சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம் முதலியவை சில மருத்துவ நூல்களை வெளியிட்டுள்ளன. கலைக்கதிர் சில மருத்துவக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. இவற்றில் பயன்படுத்தப்பட்ட சொற்களில் ஏற்ற சொற்களை எடுத்துக் கொள்ளுதல் தகும்.

ஆங்கில-தமிழ் அகராதிகளைப்பயன்படுத்தித் தக்க சொற்களைக் காணல்: டாக்டர். அ. சிதம்பரநாதன் செட்டியாரின் ஆங்கிலம் - தமிழ் அகராதி - சொற்களஞ்சியம், இலங்கை அரசு, தமிழக அரசு வெளியிட்டுள்ள சில கலைச்சொல் பட்டியல்களும் தமிழ்ப் பல்கலைக்கழகம் தொகுத்த கலைச்சொல் பட்டியல்களும் பயன்பட்டன.

சொல்லாக்கம்: புதிய சொற்களை உருவாக்கிக் கொள்ளுதல்.

சொல் தேர்வு: ஒரு கருத்தை விளக்கத் தமிழில் ஒன்றுக்கு மேற்பட்ட சொல் காணப்படும். எ-டு: Inflammation என்பதற்கு அழற்சி, அதாளம் என்பவை. இவற்றுள் 'அழற்சி' என்பது அதாளம் என்பதைவிட வழக்கில் உள்ள சொல் எனவே அதை எடுத்துக்கொள்ளலாம்.

தமிழ்ப்படுத்தல்: தக்க சொல் இல்லாத சர்வதேசச் சொற்களை, அப்படியே தமிழ்ப்படுத்திக் கொள்ளுதல். Protoplasma புரோட்டோபிளாஃச்மா

"எல்லாச்சொல்லும் பொருள் குறித்தனவே":

சில சொற்களைச் சொல்லுதல் நாகரிகம் இல்லை எனக் கருதப்பட்டது. 'முலை' என்று சொல்வது கூடாது. 'மார்பு' என்றுதான் சொல்லவேண்டும் என்பார்கள். ஆனால், மருத்துவஇயலில், மார்பு முலை ஆகியவை வெவ்வேறு உறுப்புகளைக் குறிக்கும். இவற்றில் வரும் நோய்களும் சிறிது மாறுபட்டவை. இவ்விடங்களில் மார்பு, முலை என்பதைத் தனித் - தனியாகக் குறிக்க வேண்டும்.

பழைய தமிழ்ச் சொற்களுக்குப் புதிய பயன்பாடு தருதல்: தமிழில் பொருள் மிக்க, ஆனால் வழக்கில் இல்லாத, சொற்கள் எண்ணிலடங்காமல் உள்ளன. இவைகளை அறிவியலில் ஆளலாம். புதிய வழக்கு நேரும்.

முடிப்புரை: 'பொது அறுவை மருத்துவம்' என்ற நூலை எழுதும்போது இன்னொரு பட்டறிவும் கிடைத்தது. சில ஆங்கிலப் புத்தகங்களை வைத்து நேரடியாக மொழிபெயர்த்து எழுதுவதைவிட, அவற்றைப் படித்துக் கருத்தை உள்வாங்கி எழுதுவதே எளிமையாகவும் மகிழ்ச்சி தருவதாகவும் இருந்தது.

டாக்டர். சு. நரேந்திரன், தஞ்சை மருத்துவக்கல்லூரி.

பதிப்பாசிரியர்: இயக்குநர், பதிப்புத்துறை.
அச்சு: தமிழ்ப் பல்கலைக் கழக அச்சகம், தஞ்சாவூர்-613 001.